

துறைமுகம் சட்டமன்ற தொகுதி வார்டு 60ல் அன்னை சத்யா நகர் பகுதியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூபாய் 25.96 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தை (நியாய விலை கடை) பொது மக்களின் பயன்பாட்டிற்கு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு பொருட்களை விநியோகம் செய்தனர். அருகில் மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் ரவிதேஜா கட்டா, பொது விநியோகத் திட்ட இணைப்பதிவாளர் ஹேமா உள்ளிட்டோர் உள்ளனர்.




கோவை மாவட்டம், அன்னூர் குன்னத்தூர் ஊராட்சியில் ரூ 30 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடத்தை மின்சாரம் மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து மேட்டுப்பாளையம் வட்டம் காரமடை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பெள்ளேபாளையம் ஊராட்சியில் ரூ.29.70 லட்சம் மதிப்பில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், ரூ.60 லட்சம் மதிப்பில் எலகம்பாளையம் பகுதியில் புதிய நீருந்து நிலையம், ரூ.8 லட்சம் மதிப்பில் ராசடி ஏடி காலனி பகுதியில் சுகாதார வளாகம், ரூ.6.65 லட்சம் மதிப்பில் பெள்ளேபாளையம் ஜே.ஜே.நகர் பகுதியில் கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் என மொத்தமாக ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகள் நிறைவடைந்த நிலையில் இதனை தமிழக மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வு துறை அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்.

### தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்களை

# மகளிர் அணியினர் பெண்கள் மத்தியில் எடுத்துச் சொல்ல வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வேண்டுகோள்!

நாமக்கல், ஜன. 5

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் திருச்சி சாலையில் நளா ஹோட்டலில் நடைபெற்றது. மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ப.ராணி தலைமை தாங்கினார். மாவட்ட மகளிரணி அமைப்பாளர் ஜோதிலட்சுமி வரவேற்றார். சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ. இராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி, மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் கௌரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



கூட்டத்தில், கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு பேசியதாவது, தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெண்களின் வாழ்க்கைத்தரம் உயர பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். பெண்களுக்கு இலவச பஸ் பயணம், மகளிர் உரிமைத். தொகை, மகளிர் சுய உதவி குழுவினருக்கு கடன் உதவி, புதுமைப் பெண்கள் திட்டம், பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் போன்ற திட்டங்களால் பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது.

பெண்களுக்கு, தந்தையாகவும், சகோதரராகவும், இப்படி தாயுமானவராக இருக்கக் கூடியவர் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள். பெண்கள் முழுமையாக நம்முடைய முதலமைச்சர் தான் எதிர்கால தமிழினத்தை காப்பாற்றக் கூடியவர் என்று நம்புகின்றனர். எனவே இனி வரும் தேர்தலில், முழுமையாக பெண்களின் ஆதரவு நமக்கு கிடைக்கும். தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்களை, மகளிர் அணியினர் பெண்கள் மத்தியில் எடுத்துச் சொல்ல வேண்டும். கிழக்கு மாவட்டத்தில் உள்ள 3 சட்டசபை தொகுதியிலும் உள்ள அனைத்து வாக்குச்சாவடியிலும், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகளை நியமிக்கவேண்டும்.

அதற்கான பணிகளை மகளிர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அந்தந்த நகர, ஒன்றிய பேரூராட்சி செயலாளர்களுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும். நமது மாவட்டத்திற்கு என்று ஒரு சிறப்பு உள்ளது. மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நமது மாவட்டத்தை சார்ந்தவர். நமது மாவட்டம் மகளிர் அணி செயல்பாட்டில் முன்னோடியாக இருந்தால் தான் அவருக்கும் பெருமை, அனைவருக்கும் பெருமை. இவ்வாறு பேசினார்.

கூட்டத்தில் வழக்கறிஞர் நக்கீரன், மாநகர மேயர் து.கலாநிதி, துணை மேயர் எஸ்.பூபதி, நகர செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவக்குமார், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கேபி.இராமசுவாமி, அ.அசோக்குமார், கே.பி.ஜெகநாதன், பெ.நவலடி, ஆர்.எம்.துரைசாமி, வி.கே.பழனிவேல், பி.பால சுப்பிரமணியம், எம்.பி.கௌதம், ரா.ஜெயபிரகாஷ், எஸ் எஸ்.செந்தில் முருகன் மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பொறுப்பேற்ற மூன்றரை ஆண்டுகளில்

# 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கியுள்ளது திராவிட மாடல் அரசு!

## கோவையில் அமைச்சர் செந்தில் பாலாஜி பேச்சு!

கோவை, ஜன.5-

பொறுப்பேற்ற மூன்றரை ஆண்டுகளில் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கியுள்ள தமிழக அரசு என மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற நலத்திட்ட விழாவில் அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கோவை மாவட்டம், அன்னூர் குன்னத்தூர் ஊராட்சியில் ரூ 30 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடத்தை மின்சாரம் மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

அதனை தொடர்ந்து மேட்டுப்பாளையம் வட்டம் காரமடை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பெள்ளேபாளையம் ஊராட்சியில் ரூ.29.70 லட்சம் மதிப்பில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், ரூ.60 லட்சம் மதிப்பில் எலகம்பாளையம் பகுதியில் புதிய நீருந்து நிலையம், ரூ.8 லட்சம் மதிப்பில் ராசடி ஏடி காலனி பகுதியில் சுகாதார வளாகம், ரூ.6.65 லட்சம் மதிப்பில் பெள்ளேபாளையம் ஜே.ஜே.நகர் பகுதியில் கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் என மொத்தமாக ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகள் நிறைவடைந்த நிலையில் இதனை தமிழக மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வு துறை அமைச்சர் செந்தில் பாலாஜி விழாவில் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்.

**சாலை மேம்பாட்டுக்கு ரூ.25 கோடி நிதி!**

இதே போல் சிக்காரம்பாளையம் ஊராட்சி கண்ணார்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.45 லட்சம் மதிப்பில் கட்டி கலையரங்கத்தை துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் செந்தில் பாலாஜி "கடந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் இரண்டு லட்சத்து இருபதாயிரம் மின் இணைப்புகள் மட்டுமே விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிலையில் தி.மு.க. வின் மூன்றாண்டு ஆட்சி காலத்திலேயே இரண்டு லட்சம் இலவச மின் இணைப்புகளை விவசாயிகளுக்கு வழங்கி உள்ளோம்.

மேலும் கோவை மாவட்டத்தின் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்திற்காக ரூபாய் 25 கோடி நிதி ஒதுக்கி இம்மாவட்ட வளர்ச்சிக்கு தமிழக முதல்வர் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறார்" என்றார்.

தொடர்ந்து பெள்ளேபாளையம் ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்லம், ஊரக வீடுகள் பழுதுபார்க்கும் திட்டம், பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட மற்றும் சீரமைக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு அமைச்சர் வழங்கினார்.

அது தொடர்ந்து பகத்தூர் வள்ளி கும்மி நாட்டியக் குழுவினரின் கும்மி நடனம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார், பாடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ. ரவி, குன்னத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் கீதா தங்கராஜ், அன்னூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் தனபால், பள்ளேபாளையம் ஊராட்சி தலைவர் பிரஸ்குமார், காரமடை கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். எம்.டி.கல்யாணசுந்தரம், ஒன்றிய கவுன்சிலர் அன்னூர் ஆனந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பா.அருண்குமார், சி.ஆர். ராமச்சந்தின், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், மேற்கு ஒன்றிய செயலாளர் சுரேந்திரன், கோவை மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை அறங்காவலர் குழு உறுப்பினர் கவிதா கல்யாண சுந்தரம், சிறுமுகை பேரூர் கழக செயலாளர் உதயகுமார், துணை செயலாளர் செந்தில்குமார், பெள்ளேபாளையம் ஊராட்சி மன்ற துணை தலைவர் சுரேந்திரன் தென்னை சிவா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அரசுப் பள்ளிகளில்

# ஆண்டு விழா நடத்திட ரூ.14 கோடி ஒதுக்கீடு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

சென்னை, ஜன. 5-

அரசுப் பள்ளிகளில் ஆண்டு விழா கொண்டாடிட ரூ.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

2024-2025 ஆம் கல்வியாண்டில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் உத்தரவின்படி அனைத்து பள்ளிகளிலும் பள்ளிகளின் கல்வி செயல்பாடுகள், மாணவர்களின் சிறப்பு அம்சங்கள், ஆசிரியரின் சிறப்பு செயல்பாடுகள், ஆகியவற்றை பெற்றோர்களுக்கு எடுத்துரைத்து பள்ளி ஆண்டுவிழா நடத்திட வேண்டும் என 14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே ஜனவரி மாதம், பிப்ரவரி மாதங்களில் உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளிலும், ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை தொடக்க நடுநிலைப் பள்ளிகளிலும் பள்ளிகளின் வசதிக்கேற்ற பெற்றோர்கள், பொது மக்களின் முன்னிலையில் அமைச்சர்கள் மற்றும்

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர் கொண்டு சிறப்பாக பள்ளி ஆண்டு விழா நடத்திட மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் தலைமை ஆசிரியர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# ஊத்தங்கரை, பர்கூர் சட்டமன்றத் தொகுதிகளில் வளர்ச்சி திட்டப்பணிகள்!

## மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கிருஷ்ணகிரி, ஜன.5-

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி மத்தூர் ஒன்றியம் வாலிப்பட்டி ஊராட்சியில் ரூ.98.80 லட்சம் மதிப்பீட்டில் வாலிப்பட்டி முதல் சாணிப்பட்டி வரை தார் சாலை அமைக்கும் பணிகளையும், சிவம்பட்டி ஊராட்சியில் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சங்கர் அவர்களின் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.27.25 லட்சம் மதிப்பீட்டில் 60 ஆயிரம் லிட்டர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியை திறந்து வைத்தும், பயணியர் நிழற்கூடம் அமைப்பதற்கான பணிகளையும் இதனைத் தொடர்ந்து 5.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்தூர் ஊராட்சி ஒனறிய அலுவலக கட்டிடம் கட்டும் பணிகளையும், நாகம்பட்டி ஊராட்சி என்.மோட்டூர் கிராமத்தில் 1.07 கோடி ரூபாய் மதிப்பில் சிமெண்ட் கல் பதித்தல், பைப்லைன், கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தோம் பர்கூர் சட்டமன்ற தொகுதி குட்டூரில் புதிய ஊராட்சி மன்ற அலுவலகத்தை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் தலைமையில் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாவட்ட பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் செந்தில், ஒன்றிய செயலாளர் நரசிம்மன், குண.வசந்தரசு, எக்கூர் செல்வம், அறிஞர், ராஜேந்திரன்,

ஒன்றிய குழு பெருந்தலைவர் பெருந்தலைவர் விஜயலட்சுமி பெருமாள், மாவட்ட கவுன்சிலர் சங்கர், ஆதி திராவிடர் நல குழு அமைப்பாளர் ஜீவானந்தம், மருத்துவர் அணி துணை தலைவர் தென்னரசு, துணை அமைப்பாளர்கள் சக்திவேல், பாலாஜி, ஊராட்சி மன்ற தலைவர் செல்வி கதிர்வேல், பெருமாள் உள்ளிட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் பிறந்த நாள் விழா! புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

# திருமயம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை!

புதுக்கோட்டை.ஜன.5-

திருமயத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவி வழங்கும் விழாவில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கொள்கை பரப்புச் செயலாளர் லியோனி ஆகியோர் உரையாற்றினர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை திமுக கட்சியைச் சேர்ந்த ஒவ்வொரு அணியினரும் மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி கொண்டாடி வருகின்றனர். இதன் அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தெற்கு ஒன்றியம் சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவி வழங்கும் விழா மற்றும் பொதுக்கூட்டம் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தலைமையில் நடைபெற்றது. விழாவிற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் அழகு. சிதம்பரம் அனைவரையும் வரவேற்று பேசினார்.

விழாவில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரை வழங்கி பேசுகையில், திருமயத்தில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அதிநவீன வசதிகளுடன் புதிய மருத்துவமனை, புகழ்பெற்ற சத்தியகிரீஸ்வரர், சத்தியமூர்த்தி பெருமாள் கோயில் குடமுழுக்கு விழா, ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டிடம், இறுதியாக திருமயம் ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்தியது ஆகிய வாக்குறுதிகள் எல்லாம் நிறை வேற்றிவிட்டு உங்களிடம் பேசுகிறேன். இதைவிட அதிகமாக எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினரும் ஒரு தொகுதிக்கு செய்ய முடியாது. மகளிருக்கு உதவித்தொகை, மகளிருக்கு விடியல் பயணம், புதுமைப்பெண் இது போன்ற திட்டங்கள் எந்த மாநிலத்திலாவது உண்டா. தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ள காலை உணவு திட்டத்தை கனடா பிரதமர் வரவேற்று பேசியுள்ளார். அவ்வாறு பாராட்டும் போது இந்தியாவிற்கு மட்டு மல்ல உலகத்திற்கே வழி காட்டும் அரசு திராவிட மாடல் அரசு. திராவிட மாடல் ஆட்சியிலே எல்லாம் புதுசு எதுவும் காப்பி கிடையாது. எடப்பாடி பழனிச்சாமி, முன்னாள் அமைச்சர்கள் கேட்கிறார்கள் என்ன புதிய திட்டம் கொண்டு வந்தீர்கள் என்று இதெல்லாம் உங்க தாத்தா பாட்டி கொண்டு வந்து திட்டமா என கேள்வி எழுப்பினர்.

பெண்கள் முன்னேற்றம் என்பது திராவிட அரசுடைய இலட்சிய கொள்கை, உயிர் கொள்கை. எனவே இந்தக் கொள்கை நிறைவேற்றி விட்டால் நூறாண்டு காலமானாலும் கோட்டையை விட்டு திராவிட ஆட்சியை அகற்ற முடியாது என பெண்களை அச்சப்படுத்துவது, பெண்கள் மீது பழி சுமத்துவது, அவதூறு சொல்வது என்ற கேவலமான செயலுக்கு அதிமுக முன்வந்துள்ளது. எங்கும் குற்றம் நடப்பது இயற்கை ஆனால் அந்த குற்றங்களை கண்டுபிடித்து தடுக்கிறோமா இல்லையா என்பது தான் கேள்வி. குற்றம் நடப்பதை முன்கூட்டியே யாரும் யூகிக்க முடியாது. ஆனால் குற்றம் நடந்த பின் அதனை கண்டுபிடித்து மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் ஒரு அரசு என்றால் அது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி தலைமையிலான அரசுதான். என தெரிவித்தார்.



சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி, 131 வது வட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் தியாகராயர் நகர் மேற்குப் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, கிழக்குப் பகுதி அவைத் தலைவர் மு. மணிவண்ணன், கிழக்குப் பகுதிப் பொருளாளர் ஜி.மோகன்ராஜ், 131 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன், 131 வது வட்டக் கழகச் செயலாளர் மு.ம.செந்தில்குமார், 131 வது வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் பலர் கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, 16வது வட்டம் பேஸ் ஒன் துவாரகா நகர் பகுதியில் அமைந்துள்ள, அரசு உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு, 16 வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையிலும், மாவட்டத் துணைச் செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், பகுதி நிர்வாகிகள் கே. சிவசங்கரன், நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன், பி. தரணி, எஸ். கருணாகரன், வட்ட நிர்வாகிகள் இ. அருள், வெங்கடேசன், பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ்குமார், குமரவேல், சி. முத்தையா, ராஜ்மோகன், கே. எ. ரமேஷ், மாரி ஆகியோர் முன்னிலையிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் ராஜ்குமார், எலந்தனூர் சிவப்பிரகாஷ், மஞ்சுநாதன், காமராஜபுரம் கிருபாகரன், வக்கீல் சுரேந்தர், சி. எம். ராஜா, மகேஷ்குமார், சாம்ராஜ், தமிழரசன், நைனியப்பன், மணிகண்டன், குமார்,ரிஷி குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.